உ

சிவமயம்

# பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம்

# 11வது இலண்டன் சைவ மாநாடு

திருச்சிற்றம்பலம்

நீறுதாங்கிய திருநுதலானை நெற்றிக் கண்ணனை நிரைவளைமடந்தை
கூறுதாங்கிய கொள்கையினானை குற்றம் இல்லியைக் கற்றையம் சடைமேல்
ஆறுதாங்கிய அழகனை அமரர்க்கு அரிய சோதியை வரிவரால் உகளும்
சேறுதாங்கிய திருத்தினை நகருள் சிவக்கொழுந்தினைச் சென்றடை மனனே.

அன்புடையீர்,

ஈழத்திருநாட்டில் இருந்து புலம்பெயர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் எம்மிடையேயும் எம் சிறார்களின் மத்தியிலும் சைவ சமயக் கல்வியையும் தமிழையும் வளர்க்கும் அரும் நோக்கோடு திருக்கோயில்களின் ஒன்றியம் கடந்த பத்து ஆண்டுகளாக போட்டிப் பரீட்சைகளையும், ஆய்வு அரங்குகளையும் நடாத்தி அதனூடாக சைவப் பாரம்பரியங்களையும் விழிப்புணர்ச்சியையும் எம் சிறார்கள் மத்தியில் தோற்றுவித்து வந்துள்ளது.

அந்த வகையில் இவ்வருடமும்

## "உமாபதி சிவம் உணர்த்தும் சைவ நெறி"

என்ற கருப்பொருளை அடிப்படையாக வைத்து மாநாட்டை நடாத்தவுள்ளது.

இதற்கமைய

**23-08-2008 சனிக்கிழமை** விம்பிள்டன் பிள்ளையார் கோயில் மண்டபத்திலும்,
**24-08-2008 ஞாயிற்றுக்கிழமை** இலண்டன் சிவன் கோயில் மண்டபத்திலும்
காலை 9.00 மணி தொடக்கம் இரவு 9.00 மணிவரை
இம்மாநாடு நடைபெறவுள்ளது. இம்மாநாட்டினைச் சிறப்பிக்க

**மதுரை ஆதீனம்**

## "லோக குரு" 292வது குருமகா சன்னிதானம்
## ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

வருகை தரவுள்ளார்.

அவரோடு ஈழம், தமிழ்நாடு, கனடா, மலேசியா போன்ற நாடுகளில் உள்ள அறிஞர்களும் உள்நாட்டு அறிஞர்களும் சேர்ந்து சிறப்புரை ஆற்ற உள்ளார்கள். மாநாட்டை ஒட்டி நடைபெற்ற நாவன்மை, திருமுறை போட்டிகளில் முதலிடத்தைப் பெற்ற சிறார்களின் பங்கும் அமைந்து சிறப்புற உள்ளது.

எனவே அனைவரையும் இம்மாநாட்டில் கலந்து சைவசமய அறிவைப் பெருக்குவதுடன் பெருமை சேர்க்க வேண்டுமென அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி.

| | | |
|---|---|---|
| **டாக்டர். ச. மகேஸ்வரன்** | **தா. யோகநாதன்** | **தி. அருள்தாஸ்** |
| **தலைவர்** | **செயலாளர்** | **பொருளாளர்** |